J.M.C-N

விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 22 சனிக்கிழமை (05.05.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 137

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## விடுதலைப்புலிகளின் விமானம் இந்தியப் பகுதியிலும் பறக்கும்!

### இந்.வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் வான்படை குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி கருத்து தெரிவித்துள்ளார். இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் வான்படைப் பிரிவு இதுவரை 3 முறை வான் தாக்குதலை நடத்தியிருக்கிறது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மக்களுக்கென திரட்டிய பொருட்களை அனுப்புவதற்கு இந்திய அரசாங்கம் மறுப்பு

(சென்னை)

இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தமிழக மக்கள் திரட்டித்தந்த பொருட்களை அனுப்ப இந்திய அரசு அனுமதி மறுத்து வருகிறது என்று தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யாழ்ப்பாணம் செல்லும் பாதையை மூடி யாழ்.மக்களுக்கு உணவு மற்றும் மருந்து பொருட்கள் செல்லவிடாமல் சிங்கள அரசு தடுத்து வருவதன் விளைவாக சுமார் 5 இலட்சம் மக்கள் பட்டினியுடன் வாடுகின்றார்கள் என்ற செய்தியை அறிந்து தமிழக மக்களிடம் (04 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் நிர்வாகப் பகுதியை பார்வையிட பிரித்தானிய அனைத்துக்கட்சிக்குழு வரும்

## செப்ரெம்பர் இறுதியில் பயணம்

(லண்டன்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியை செப்ரெம்பர் மாத இறுதியில் பிரித்தானியாவின் தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு பார்வையிடத் திட்டமிட்டுள்ளதாக அதன் தலைவர் ஹெய்த் வாஸ் அறிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தேடுதல் 35 தமிழர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பில் இராணுவத்தினரால் 35 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கொழும்பு நகரின் வாழைத்தோட்டம், வெள்ளவத்தை ஆகிய பகுதிகளில் கடந்த இரு நாட்களாக பாரிய தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந் நடவடிக்கைகளில் 35 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டோரில் ஐந்து பேர் (04 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினரின் சடலங்கள் நேற்று செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைப்பு

(வவுனியா)

வவுனியா ஓமந்தைக்கு மேற்கே உள்ள இலங்கை இராணுவத்தின் முன்னரங்கப் பகுதிகளில் இருந்து விடுதலைப்புலிகளின் பிரதேசத்தில் உள்ள பாலமோட்டை பகுதியை நோக்கி நேற்று முன்தினம் முன்னேற்ற முயற்சியில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீது தாங்கள் நடத்திய தாக்குதலின்போது கொல்லப்பட்ட இரண்டு இராணுவச் சிப்பாய்களின் சடலங்களை நேற்று சர்வதேச செஞ்சிலுவைக்குழுவினரின் ஊடாக இராணுவ அதிகாரிகளிடம் கையளித்துள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைக்குழு அதிகாரிகளே இந்த சடலங்களை பொறுப்பெற்று ஓமந்தைக்குக் கொண்டு வந்து இராணுவத்தினரிடம் ஒப்படைத்ததாக செஞ்சிலுவைக் (04 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை கண்காணிப்புக்குழு இம் மாதம் இலங்கை வரும்!

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கண்காணிப்பதற்கான சர்வதேச சிறப்பு நிபுணர்கள் அடங்கிய சுயாதீன குழுவின் பிரதிநிதிகள் இம்மாத நடுப்பகுதியில் இலங்கை வரவுள்ளனர்.

மனித உரிமை மீறல்கள் பற்றி ஆராய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பற்றிக் கண்காணிப்பதற்காகவே இந்த நிபுணர்கள் வரவுள்ளனர்.

அரசின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக உலக நாடுகள் மத்தியில் பலத்த கண்டனம் எழுந்துவரும் நிலையில் வெறும் கண்துடைப் (04 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று தமிழ்க்கட்சிகள்

## இராணுவத்திடம் பொலிஸ் அதிகாரங்கள்

# மூன்று தமிழ்க்கட்சிகள் ஜனாதிபதியுடன் பேச்சு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் பத்மநாபா பிரிவுச்செயலாளர் சிறிதரன் ஆகியோர் நேற்று ஜனாதிபதியை சந்தித்துள் ளனர்.

இச் சந்திப்பின்போது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இணைந்த வட-கிழக்கில் சமஷ்டி முறைமையே தீர்வாக அமையுமென சுட்டிக்காட்டியுள்ளனர். எனினும் இச் சந்திப்பின் போது கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி சிறிலங்கா சுதந்திரக்கட்சியினால் முன்வைக்கப்பட்ட தீர்வு அரசாங்கத்தின் தீர்வுத்திட்டம் அல்ல எனவும் அது சுதந்திரக்கட்சியின் தீர்வுத்திட்டமெனவும் வலியுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலையில் அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் தமது கட்சியின் திட்டம் குறித்து மாற்று கருத்துக்களை முன்வைத்து விவாதிக்கலாமென ஜனாதிபதி இவ் மூன்று தமிழ் கட்சிகளின் தலைவர்களிடம் வலியுறுத்தி (04 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்திடம் பொலிஸ் அதிகாரங்களை

# தேசிய அமைதிச் சபை கண்டனம்

(கொழும்பு)

இராணுவத்திடம் பொலிஸின் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ளமைக்கு இலங்கை தேசிய அமைதிச் சபை கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து அந்த அமைப்பின் நிறைவேற்று இயக்குநர் வெளியிட்ட அறிக்கை வருமாறு;

பொலிஸாரின் அதிகாரங்களை இராணுவத்தினருக்கு அண்மையில் மாற்றி மகிந்த ராஜபக்ஷ வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருக்கிறார். இது குறித்து தேசிய அமைதிச் சபை மிகவும் கவலை கொள்கிறது.


பொதுமக்கள் மிகக்கடுமையான சூழ்நிலைகளுக்கு முகம்கொடுக்க நேரிடும். மனித உரிமை மீறல்களில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஈடுபட்டிருக்கின்றனர் என்ற குற்றச்சாட்டு வெளியாகியுள்ள நிலையில் இப் புதிய அறிவித்தல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பொலிஸ் மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த 30 பேர் உள்ளிட்ட 452 பேர் கைதுசெய்யப்பட்டிருப்பதாக பவ்ரல் அமைப்புத் தெரிவித்துள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

# சொல்ஹெய்முடன் ரணில் சந்திப்பு

நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சரும் இலங்கையின் சமாதான விசேட தூதுவருமான எரிக்சொல் ஹெய்மை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேசியுள்ளார்.

திட்டமிடாமல் திடீரென பிரஸலில் இடம்பெற்ற இச் சந்திப்புத் தொடர்பாக முழுமையான தகவல்கள் வெளியாகவில்லை. எனினும் இலங்கையில் இடம் பெறும் மனித உரிமை மீறல்கள், தற்பொழுது இடம்பெற்றுவரும் விடுதலைப்புலிகளின் விமானத் தாக்குதல்கள் மற்றும் சர்வகட்சிக் குழுவின் யோசனைகள் குறித்து விரிவாகப் பேசப்பட்டுள்ளதாக செய்தி ஏஜன்சிகள் தெரிவித்தன. (ச)



கொழும்பில் பெய்து வரும் தொடர் மழையினால் வீதிகளில் தண்ணீர் தேங்கி நிற்பதனால் ஏற்பட்டுள்ள நிலைமைகளைப் படங்களில் காணலாம்.

# ஐ.தே.கவின் மற்றொரு குழு அரசுடன் இணைவதற்கு பேச்சு

## ரணிலின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி பறிபோகும் அபாயம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த மேலும் ஒரு குழுவினர் அரசுடன் இணைவதற்காக எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்குத் தெரியாது பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் அரசுடன் இணைந்தால் அரசின் செல்வாக்கு அதிகரிக்கும். அதேவேளை ரணிலின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி பறிபோகும் நிலையும் ஏற்படலாம் என்று ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில். தேசிய ரீதியாக இந் நிலையில் புதியதோர் அரசியல் கொள்கை கட்டியெழுப்பப்பட்டு வருகின்ற தென்றே கூறவேண்டியுள்ளது.

தற்போதைய அரசியலில் பல குறைபாடுகள் காணப்படுகின்ற போதிலும் மகிந்த ராஜபக்ஷவையே அந்த ஆசனத்தில் இருக்க விடுவோம். ஜனாதிபதித் தேர்தலின்போது அவரின் வெற்றிக்காக நாங்கள் நிறையவே பாடுபட்டோம்.

ஆனால் அவரை ஜனாதிபதியாக்குமாறு சிறிலங்கா (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஏயார் லைன்ஸ் நிர்வாகிகளுடன் ஜனாதிபதி அவசர ஆலோசனை

(கொழும்பு)

ஏயார் லைன்ஸ் நிர்வாகிகளுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று ஆலோசனை நடத்தினார். அலரி மாளிகையில் நேற்று மாலை இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் வான்தாக்குதலைத் தொடர்ந்து கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை இரவு நேரங்களில் மூடுவதாக அரசாங்கம் அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து புதிய ஒழுங்கு முறைகள் குறித்து நேற்றைய ஆலோசனைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது. இக் கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம, விமானத்துறை பிரதி அமைச்சர் சரத் குணரட்ண, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, நிதித்துறை செயலாளர் பி.பீ.ஜயசுந்தர உள்ளிட்டோர் பங்கேற்றனர். (ச-5)

## சீனத் தூதுவருடன் நேற்று அமைச்சர் நிமால் பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கான சீனத்தூதுவர் ஈ.ஏ.தபோ, அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை நேற்றுச் சுகாதார அமைச்சில் வைத்து சந்தித்தார்.

இதன்போது வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யோசனை குறித்து தமது நாடு கவனம் செலுத்தியிருப்பதாக சீனத் தூதுவர் தெரிவித்தார்.

இதன்போது கருத்துரைத்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் இவ் யோசனையானது இறுதியானது அல்ல எனத் தெரிவித்தார்.

தமது யோசனை தொடர்பில் கட்சிகள் திருத்தங்களை முன்வைக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-3)

## இலவச மருத்துவமுகாம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ வைத்தியசாலை மருத்துவர்களால் 513-வது இராணுவப் படையணியின் நிர்வாகப் பகுதிக்குட்பட்ட ஆனைக்கோட்டை, சுதுமலை, மானிப்பாய், நயினாதீவு ஆகிய கிராமங்களில் வாழும் மக்களுக்கான இலவச மருத்துவ முகாம் ஒன்று கடந்த திங்கட்கிழமை நடாத்தப்பட்டுள்ளது.

யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில் சுமார் 500 நோயாளிகள் சிகிச்சை பெற்றார்கள்.

அத்துடன் அவர்களுக்குத் தேவையான மருந்துகளும் இலவசமாக வழங்கப்பட்டன. விசேடமாக வெசாக் தினத்தை முன்னிட்டு பகல் உணவும் வழங்கப்பட்டது என பலாலி பாதுகாப்பு படைகளின் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ச)

# சூரியனைப் போல இன்னொரு புதிய கிரகம்

(பரிஸ்)

சூரிய மண்டலங்களுக்கு அப்பால் 200ற்கும் மேற்பட்ட கிரகங்கள் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

சமீபத்தில் கிளீஸ்-581 என்ற நட்சத்திரத்தைச் சுற்றி சூப்பர் பூமி என்ற புதிய கிரகம் சுற்றி வருவதைக் கண்டறிந்தனர். இந்தப் புதிய கிரகம் பூமியைப் போலவே உள்ளது.

இப்போது கரோட் எக்சோ 1 பி என்ற புதிய கிரகத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். மானோசிரஸ் என்ற நட்சத்திரக் கூட்டங்களை இந்தப் புதிய கிரகம் சுற்றி வருகிறது.

இந்த நட்சத்திரக் கூட்டங்களில் இருப்பது ஆயிரத்து 500 ஒளி ஆண்டுகள் தூரத்தில் இது உள்ளது.

பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானிகள் அனுப்பிய கரோட் என்ற விண்கலம் இந்தப் புதிய கிரகத்தைக் கண்டுபிடித்துள்ளது. கடந்த ஆண்டு டிசம்பர் 27 ஆம் திகதி இந்த விண்கலம் அனுப்பப்பட்டது.

குரு கிரகத்தை விட 1.3 மடங்கு பெரியதாக உள்ள இந்தப் புதிய கிரகம், சூரியனைப் போலவேயுள்ளது. அதிக வெப்பம் கொண்ட இந்தக் கிரகத்தில் தீப்பிழம்புகள், பாறைகள் வெடித்துச் சிதறுவதாகவும் விண்கலம் தகவல் அனுப்பி உள்ளது. (ச-5)

# பிரித்தானியாவின் நிதி முடக்கத்திற்கு மனித உரிமைகள் அமைப்பு வரவேற்பு

(கொழும்பு)

இலங்கைக்கான நிதியுதவியை பிரித்தானிய அரசாங்கம் முடக்கியிருப்பதனை இந்தியா உள்ளிட்ட நாடுகளும் பின்பற்ற வேண்டும் என்று மனித உரிமைகளுக்கான ஆசிய அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் இயக்குநர் சுகஸ் சக்மா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் மிக மோசமான மனித உரிமை மீறல்களுக்காக பிரித்தானியா அளித்து வந்த 3 மில்லியன் பவுண்ட்ஸ் நிதி உதவி நிறுத்தப்படுவதை வரவேற்கிறோம்.

இலங்கை இராணுவத்தினரால் பாரிய அளவிலான மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்பட்டு மனிதாபிமானப் பணியாளர்கள் படுகொலை செய்யப்படும் நிலையில் இது முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையாகும்.

இந் நடவடிக்கையை இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், யப்பான், அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகளின் சபைகளும் பின்பற்ற வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# நாய்களுக்குத் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பு ஊசி கட்டம் கட்டமாக கீழ் வரும் நிலையங்களில் வைத்து வழங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாஸன் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நாவாந்துறை சென்றி சனசமூக நிலையத்திலும், 11 மணிக்கு அராலி வீதி வைரவர் கோவிலடி நாவாந்துறையிலும், 2 மணிக்கு சூரியவெளி கிராமம் நாவாந்துறைப் பகுதிகளிலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

மறுநாள் 8 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு முஸ்லிம் கல்லூரி வீதியிலும், 11 மணிக்கு மாவடி வீதி ஐந்து சந்தியிலும், 2 மணிக்கு பெரியபள்ளி வாசல் முன்பதாகவும் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படுவதுடன்,

எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு ஆறுகால்மடம் சனசமூக நிலையத்திலும், 11 மணிக்கு செழியன் வீதியிலும், 2மணிக்கு ஒஸ்மானியாக் கல்லூரியிலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (ச-3)

# இணைந்த வட.- கிழக்குக்கு விசேட அதிகாரங்கள்

## அரசியல் பிரச்சினைக்கு இதுவே தீர்வு என்கிறது ஈ.பி.டி.பி.

(கொழும்பு)

தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இத்தருணத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் தங்களது தீர்வு யோசனைகளை முன்வைத்து வருகின்றன. இதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்ந்த தீர்வு யோசனையினை வெளியிட்டிருந்தது.

ஈ.பி.டி.பியினராகிய நாம் ஜனநாயக வழிமுறைக்கு திருப்பியிருந்த ஆரம்பங்களில் இருந்து எமது மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு ஒத்ததான தீர்வினை வலியுறுத்தி வருகின்றோம் என ஈ.பி.டி.பி. வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்வு யோசனை ஒன்றை முன்வைத்திருந்ததாகவும் ஆனாலும் சர்வகட்சி மாநாடுதான் அதற்கான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் எனவும் சர்வகட்சி மாநாட்டின் மூலம் நியாயமான ஒரு தீர்வை உருவாக்க முடியும் என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எமது கட்சியின் அரசியல் திட்டத்தின் பிரகாரம் நாம் மேற்கொண்டிருக்கும் நிலைப்பாடு தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்கான பூரண ஏற்பாடாகவே இருக்கின்றது.

வடக்குக் கிழக்கு தமிழ் பேசும் மக்களின் வரலாறு வாழ்விடம், வடக்குக் கிழக்கு இணைந்த மாகாணங்களுக்கான விசேட அதிகாரங்கள், இணைந்த வடக்குக் கிழக்கு நிர்வாக அலகிற்குள் முஸ்லிம் மக்களுக்கான அகச்சுயாதிக்க அலகு.

இதனடிப்படையில் நடைமுறைச்சாத்தியமான வழிமுறையில் மூன்று கட்ட நகர்விற்கு ஊடாக மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!! என்ற இறுதி இலக்கை நோக்கிய நகர்விற்கு அடித்தளம் இடுவதே ஈ.பி.டி.பியின் அரசியல் இலக்கு.

இதுவே எமது அரசியல் தீர்மானம். இதே வேளை இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்குக் கிழக்கு இணைப்புக் குறித்து அம் மக்களின் தீர்மானத்திற்கு விடுவதற்கான ஜனநாயக சூழ்நிலை எழுமேயானால் அவ்வாறான சூழலில் அம் மக்களின் ஜனநாயக ரீதியிலான தீர்மானத்தை ஈ.பி.டி.பி. ஏற்றுக் கொள்ளும் என்றுள்ளது. (ச-5)

# சமூகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக யாழ்.பிராந்திய நிலையத்தில் கல்வி டிப்ளோமா மற்றும் கல்விமாணி பாட நெறிகளில் கடமையாற்றும் விரிவுரையாளர்களையும் வள ஆளணியினரையும் நாளைக் காலை 10 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி நிலையத்துக்குத் தவறாது சமுகமளிக்குமாறு யாழ்:பிராந்திய மத்திய நிலைய இணைப்பாளர் திருமதி த.வில்வநாதன் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

# எதிராளிக்கு அழைப்புக் கட்டளை

**இல. 16 பிரிவு 55 (1)**

**யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்**

தயாபரன் பெண் சுதா,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

வழக்காளி

வழக்கு இலக்கம் மணநீக்கம்/751 எதிராக

இராசையா தயாபரன்
மடத்துப்பிள்ளையார் கோவிலடி,
தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.
தற்போது வெளிநாடு, விலாசம் தெரியாது.

எதிராளி

மேற்சொல்லப்பட்ட எதிராளிக்கு

மேற்சொல்லப்பட்ட வழக்காளிகள் இந்நீதிமன்றத்தில் உமக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளார்கள். ஆதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2007 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 22 ஆம் திகதி கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் இவ்வழக்கானது மறுகட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

பதிவு பெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில் சட்டமுறையான எல்லா அறிவித்தல்களையும் சேர்க்கக் கூடிய முகவரி ஒன்றினைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடும்படி நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

தயாரித்தது:
லிங்கா துரைராஜா
வழக்காளிகளின்
பதிவு பெற்ற சட்டத்தரணி
திகதி:- 04.05.2007

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

*குறிப்பு:-* விளக்கத்திகதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் திகதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரி ஒன்றை இந் நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறு பதிவஞ்சல் மூலம் அனுப்புவதற்காகும் செலவை மேவுவதற்கு தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும் எண்பதாம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர். (007)

# கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று பரிசளிப்பு விழா

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 10 மணியளவில் கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் தலைமையில் கல்லூரியில் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளை குமரன் பிரதம விருந்தினராகவும் நல்லூர் கோட்டக் கல்வி அதிகாரி கே.வி.குணசேகரம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

பரிசில்களைத் திருமதி சுபாசினி குமரன் வழங்குவார். (ந)

# மனித உரிமைக்கான கௌரவ விருது இலங்கையர்கள் இருவருக்கு

(கொழும்பு)

மனித உரிமைகள் தொடர்பான கௌரவ விருது புரூண்டி நாட்டின் மனித உரிமை ஆர்வலர் ஒருவருக்கும் இலங்கையர்கள் இருவருக்கும் இடையில் பகிரப்பட்டுள்ளது.

இவ்வாண்டுக்கான 'மார்ட் டின் அனஸ்' என்ற மனித உரிமைக் காப்புத் தொடர்பான இவ் விருதுக்காக புரூண்டியில் சிறைக் கைதிகளுக்காகக் குரல் கொடுத்த பிஜே கிளைவர் மொனிபா மற்றும் மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் குழுவின் ஸ்தாபகர்களான ராஜன் கூல் மற்றும் கோபாலசிங்கம் ஸ்ரீதரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இவ் இரு தரப்பினரும் ஜனநாயகத்திற்கு எதிரான மனித உரிமைகள் தொடர்பான பணிகளை ஆற்றியிருந்ததாக ஜெனீவா மனித உரிமைகளுக்கான நீதிபதி சபையின் தலைவர் ஹன் தூலன் தெரிவித்துள்ளார். (ச-3)

# சிறிலங்கா ஏயார் லைன்ஸின் இரவு நேர சேவை ரத்து

சிறிலங்கா ஏயார் லைன்ஸ் நிறுவனம் தனது இரவு நேர விமான சேவையை நிறுத்துவதாக அறிவித்துள்ளது. துறைமுகம் மற்றும் விமானத்துறை அமைச்சு இராணுவத்தினருடனான ஆலோசனைக்குப் பின்னர் இதனை சிறிலங்கா ஏயார் லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. (ச-5)

# வாழைச் செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இரவு பெய்த கடும் காற்றுடன் கூடிய மழையினால் வாழைச் செய்கை பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அச்சுவேலி, நவக்கிரி, புத்தூர், நீர்வேலி மற்றும்உரும்பிராய்ப் பகுதிகளிலுள்ள பெருமளவான வாழை மரங்கள் முறிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் பெருமளவான நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (ச)

# பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி கடந்த மாதம் 16 ஆம் திகதியிலிருந்து நடைபெற்று வருவதாக யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கான விளையாட்டுக் குழுச் செயலாளரும் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளருமான க.குமாரசாமி அறிவித்துள்ளார்.

இவ் விளையாட்டுப் போட்டியில் எதிர்வரும் 8 ஆம் திகதி 19 வயதுக் குட்பட்ட ஆண், பெண் களுக்கான மேசைப் பந்து யாழ்.மத்திய கல்லூரியிலும் 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பூப்பந்துப் போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதியும் பெண்களுக்கான பூப்பந்துப் போட்டி மறுநாள் 10 ஆம் திகதியும் யாழ்.பல்கலைக் கழகத்திலும்நடைபெறவுள்ளது. (ச-3)

உலகம் ஒரு தொட்டில் அல்ல என்பதை அனுபவம் நமக்குக் கற்பிக்கிறது..

-ப்ராய்டு

வலம்புரி

## பிரிட்டனின் வழியை உலக நாடுகள் பின்பற்ற வேண்டும்

இலங்கைக்கான நிதியுதவியை பிரிட்டன் இடைநிறுத்தி வைத்துள்ளது. இன விவகாரம் தொடர்பில் இலங்கை அரசு கடைப்பிடித்து வரும் அசமந்தப்போக்கும் மனித உரிமை மீறல்களும் காரணமாக பிரிட்டன் இலங்கைக்கான நிதியுதவியை நிறுத்தி வைத்துள்ளது.

இலங்கை விவகாரம் தொடர்பில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை விவகாரம் தொடர்பில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் விவாதம் நடாத்தியமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசுக்கு ஏற்பட்ட பின்னடைவு என்றே கூற வேண்டும்.

எதுவாயினும் இலங்கை ஆட்சியாளர்கள் தம்பாட்டில் நடந்து கொள்ள முடியாதுஎன்பதற்குப் பிரிட்டனின் நிதியுதவி முடக்கம் நல்லதொரு உதாரணமாகும்.

ஒரு காலத்தில் இலங்கையின் ஆட்சியாளர்கள் சர்வதேசத்தின் கருத்திற்கு மதிப்பளித்து வந்தார்கள். சர்வதேச சமூகம் இலங்கை விவகாரம் தொடர்பில் தெரிவிக்கும் கருத்திற்கு தகுந்த பதிலை வழங்க வேண்டும். சர்வதேசத்தின் நன்மதிப்பைப் பெற வேண்டும் என்ற எண்ணப்பாடு இருந்தது.

இந்நிலைமை ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் காலத்தோடு முடிபுற்றதென்று கூற வேண்டும். ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த ஆர்.பிரேமதாசா அண்டை நாடான இந்தியாவை பகைத்துக் கொள்வதில் இம்மியும் கவலை கொள்ளவில்லை.

இலங்கையின் பரம எதிரியாக அவர் இந்தியாவைக் கருதினார். இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் தலையீடு இருப்பதனை அவர் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை. அண்ணனும் தம்பியும் அடிபட்டுக் கொள்வார்கள். ஒற்றுமைப்பட்டுக் கொள்வார்கள். அதில் அயல் வீட்டார் தலையிடத் தேவையில்லை என்பது ஆர்.பிரேமதாசாவின் தத்துவம்.

பிரேமதாசாவின் கொள்கை எந்தளவு தூரம் ஏற்புடையது என்ற ஆய்வுகள் எதுவுமின்றி அவரின் பின்தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர்களும் அவரின் பாதையில் சர்வதேச சமூகத்தை எதிர்த்தனர்.

இவர்களில் டி.பி.விஜயதுங்கா முதன்மையானவராகவிருந்தார். இந்த வியாதி ஐக்கிய தேசியக் கட்சியில் பலம் பெற்றிருந்தது எனக் கருதினாலும் சந்திரிகா குமாரதுங்கவின் ஜனாதிபதிக் காலத்தில் பிரதமராக இருந்த ரட்ணசிறி விக்கிரமநாயக்க, இனவிவகாரத்தில் தலையிடும் வெளிநாடுகளை மிகக் கடுமையாக எதிர்த்தார்.

அவர் எதிர்ப்பு உலக நாடுகளுடன் நல்லுறவைப் பேண வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருந்த சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடைஞ்சலாகவேயிருந்தது.

எனினும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் எதிர்ப்பு நடவடிக்கைதான் அவரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்திலும் பிரதமராக்கியது.

அவர் தன் பணியைத் தொடர்ந்து மேற்கொள்கிறார். அண்மையில் கூட எந்த வல்லரசும் இலங்கை இனவிவகாரத்தில் தலையிட அனுமதிக்க மாட்டோம் எனக் கூறியுள்ளார்.

அதுமட்டுமன்றி இலங்கைக்கு உதவுவது உலக நாடுகளின் கடமை என்பதும் அவரின் கட்டளையாக இருந்தது.

இந்நிலையில் இலங்கைக்கான நிதியுதவியைப் பிரிட்டன் இடைநிறுத்தியிருப்பது சர்வதேசத்திடம் கைநீட்டிக் கொண்டு சர்வதேசத்தின் கருத்துக்களை - ஆலோசனைகளை உதாசீனம் செய்பவர்களுக்கான படிப்பினையாகும்.

பிரிட்டனின் முடிபை ஏனைய நாடுகளும் பின்பற்றினால் இலங்கையின் ஆபத்து நிலை தெரிய வரும்.

# வான்புலிகளை எதிர்கொள்ள கப்பல்களில் விமான எதிர்ப்பு கருவிகளைப் பொருத்த வேண்டும்

## ஆங்கில ஊடகம் ஆலோசனை

(கொழும்பு)

வான்புலிகளை எதிர்கொள்ள கடற்படை கப்பல்களிலும் விமான எதிர்ப்பு கருவிகளைப் பொருத்த வேண்டுமென்று கொழும்பு ஊடகம் யோசனை தெரிவித்துள்ளது. கொழும்பு ஆங்கில ஊடகம் இது தொடர்பில் வெளியிட்டுள்ள கட்டுரை வருமாறு,

பலாலி கூட்டுப்படைத் தளத்தின் மீது வான்புலிகள் நடத்திய இரண்டாவது தாக்குதல் தொடர்பாக படையினர் ஆராய்ந்து கொண்டிருந்த போது விடுதலைப்புலிகள் மூன்றாவது வெற்றிகரமான தாக்குதலையும் நடாத்தி முடித்துவிட்டனர்.

விடுதலைப்புலிகளின் ஒற்றை இயந்திரத்தைக் கொண்ட Zlin -143 அல்லது செஸ்னா வகை வானூர்திகள், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் செல் எரிவாயு நிலையம் ஆகியவற்றை கடந்த சனிக்கிழமை தாக்கியுள்ளன.

புத்தளம் பகுதியில் இரு வானூர்திகளை மக்களும் படையினரும் அவதானித்ததனை தொடர்ந்து இந்தச் சம்பவம் நடந்துள்ளது. ஏப்ரல் 29 ஆம் திகதி அதிகாலை 1.50 மணியளவில் கொழும்பு நகரத்தின் வான்பரப்பில் விடுதலைப்புலிகளின் வானூர்திகள் பிரவேசித்தன.

அப்போது மேற்கிந்தியத் தீவுகளில் உள்ள பார்படோசில் நடைபெற்ற உலகக் கோப்பைக்கான துடுப்பாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தைப் பெரும்பாலான மக்கள் பார்த்துக் கொண்டிருந்தனர்.

எனினும் மற்றைய நாள்களைப் போல அல்லாது பாதுகாப்புத் தரப்பினர் வான் எதிர்ப்பு சாதனங்களை இயங்க வைத்துள்ளனர். இவை கொழும்புத்துறைமுகம், கட்டுநாயக்கா மற்றும் இரத்மலானை வான்படைத் தளங்கள் ஆகியவற்றிலிருந்து இயக்கப்பட்டன.

இதேசமயத்தில் கட்டுநாயக்காவிலிருந்து இரு எம்.ஐ-24 ரக உலங்கு வானூர்திகளும் அநுராதபுரம் மற்றும் இரத்மலானைப் பகுதிகளிலிருந்து கே-08 ரகப் பயிற்சி வானூர்திகளும் அனுப்பப்பட்டன.

விடுதலைப்புலிகளின் வானூர்திகளை அழிப்பதே அவற்றின் நோக்கம். இரத்மலானை, கட்டுநாயக்காத் தளங்களிலிருந்த ராடர்கள் வான்புலிகளின் வானூர்திகளை ஒவ்வொரு சமயமும் காட்டிக் கொண்டிருந்தன.

பிரதான ராடர் தொகுதியில் இருந்து தப்புவதற்காக அவை தாழப் பறந்து சென்றன.எனினும் விடுதலைப்புலிகளின் வானூர்திகள் எவ்வித சேதமுமின்றி கொழும்பு வான்பரப்பில் 45 நிமிடங்கள் சுற்றித்திரிந்துள்ளன.

வான்புலிகள் கொழும்பு வான்பரப்பில் நுழைந்த போது படைத் தரப்பினர் துடுப்பாட்டப் போட்டியை ரசித்துக்கொண்டிருந்தனர். எனினும் அதன் பின்னர் வானூர்திகளைச் சுட்டு வீழ்த்துவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அரசாங்கம் இந்த நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு வேறுபட்ட வழியை கையாண்டுள்ளது. புதிய வான் பாதுகாப்பு சாதனங்களையும் வானூர்திகளையும் கொள்வனவு செய்ய முயன்றுள்ளது. அதேசமயம் அரசாங்கம் கடற்படை கப்பல்களிலும் வான்பாதுகாப்புச் சாதனங்களைப் பொருத்த முயற்சிக்க வேண்டும்.

பெரிய கப்பல்களில் இதனைப் பொருத்துவதன் மூலம் அவற்றை முல்லைத்தீவு கடற்பகுதிக்கு அனுப்பி வான்புலிகளுக்கு பெரும் சேதங்களை உண்டுபண்ணலாம். ஏனெனில் கடற்படையின் முன்னைய தகவல்களின்படி முல்லைத்தீவில் விடுதலைப்புலிகளின் வானூர்திகளின் பயிற்சிகளை அவர்கள் பலமுறை அவதானித்துள்ளனர் என அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# மத்தியஸ்தராக செயற்படும் விருப்பத்தை மறைமுகமாக தெரிவித்துள்ள பிரித்தானியா

## ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை தெரிவிப்பு

இலங்கையின் சமாதான செயற்பாடுகளில் மத்தியஸ்தராகச் செயற்படுவதற்கான விருப்பத்தை பிரித்தானியா மறைமுகமாகத் தெரிவித்துள்ளதாக ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் மோதல்கள் அதிகரித்து நிலைமை அபாய கட்டத்தை அடைந்துள்ள நிலையில் நோர்வேயின் மத்தியஸ்தமும் சமாதான செயற்பாடுகளுக்கான அனுசரணைப் பணிகளும் தோல்வி கண்டுள்ளன.

இந்நிலையில் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் மத்தியஸ்தராக செயற்பட பிரிட்டன் ஆர்வமாகவுள்ளது. எனினும் அனுசரணைப் பணியிலிருந்து நோர்வே புறந்தள்ளப்படுவதையோ அப்புறப்படுத்தப்படுவதையோ பிரிட்டன் விரும்பவில்லை.

இலங்கை அரசாங்கம், விடுதலைப்புலிகள், நோர்வே ஆகிய மூன்று தரப்பையும் ஒன்றுதிரட்டி மத்தியஸ்தப் பணியை மேற்கொள்ளவே பிரிட்டன் விரும்புகிறது. பிரிட்டனின் அண்மைக்கால நடவடிக்கைகள் இதனை உணர்த்துகின்றன.

இந்தப் பின்னணியிலேயே கொழும்பிலுள்ள பிரிட்டன் உதவி உயர்ஸ்தானிகர் லெஸ்லி கிறெய்க்கின் கிளிநொச்சி விஜயம்ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. எனினும் பாதுகாப்புக் காரணங்களுக்காக நேற்றைய தினத்தில் அவர் கிளிநொச்சிக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் இடைநிறுத்தப்பட்டது.

பிரிட்டனிலுள்ள இலங்கையின் கிறிஸ்தவக் குருக்கள் இதற்காக கடினமாக உழைத்து வருவதாகவும்தெரிவிக்கப் படுகின்றது. (ச-5)

# ஊடக சுதந்திரத்தின் மீதான தாக்குதல் முழுமனித சமுதாயத்திற்கும் எதிரானது

## ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கி மூன்

ஊடக சுதந்திரத்தின் மீதான தாக்குதல்களானது சர்வதேச சட்டங்களுக்கும் முழு மனித சமுதாயத்திற்கும் எதிரானது. சுதந்திரமானதும் பாதுகாப்பானதுமான ஊடக சூழலானது ஜனநாயகத்திற்கான அடித்தளம் என ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கி மூன் தெரிவித்துள்ளார். சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு ஐ.நா.செயலாளர் நாயகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவ்வறிக்கையில்மேலும் கூறப்பட்டுள்ளதாவது, கடந்த வருடம் கடமையில் ஈடுபட்டிருந்த வேளை 150 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மேலும் பலர் அச்சுறுத்தல், துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளதோடு, பலர் கடத்தப்பட்டும் உள்ளனர்.

இவற்றிக்கு ஆயுதப் பிணக்குகள் மாத்திரம் காரணமல்ல. ஊழல், வறுமை , அதிகாரத் துஷ்பிரயோகம் போன்றவையும் இவற்றிற்குக் காரணமாக அமைந்துள்ளன. ஊடக சுதந்திரத்திற்காக தமது உயிர்களைத் தியாகம் செய்த அனைத்து ஊடகவியலாளர்களையும் ஐக்கிய நாடுகள் சபை இந்நேரத்தில் நினைவு கூருகிறது.

ஊடக சுதந்திரத்தையும் ஊடகவியலாளர்களையும் பாதுகாக்க ஏனைய சர்வதேச அமைப்புக்களுடன் இணைந்து ஐ.நா. அர்ப்பணிப்புடன்செயலாற்றும். ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு அரசாங்கங்களும் சர்வதேச அமைப்புக்களும் சிவில் சமூகமும் முக்கிய பங்காற்ற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (ச)

# வெள்ளவத்தைக் காலி வீதியில் நிலம் கீழ் இறங்கியுள்ளது

## பொலிஸார் எச்சரிக்கை

வெள்ளவத்தை றொக்ஸி தியேட்டருக்கு எதிரே காலி வீதியில் 15 அடிக்கு நிலம் கீழ் இறங்கியுள்ளதால் வெள்ளவத்தைக்கான காலி வீதியின் போக்குவரத்தை தவிர்த்துக் கொள்ளும்படி பொலிஸார் அறிவித்துள்ளனர்.

தொடர்ந்து பெய்து வந்த கடும் மழையினால் நேற்று காலை 8மணியளவில் றொக்ஸி தியேட்டருக்கு எதிரே காலி வீதியின் நிலம் 15 அடிக்கு கீழ் இறங்கியுள்ளதால் வெள்ளவத்தைக் காலி வீதியினூடாக செல்வோர் மாற்றுப் பாதையைப் பயன்படுத்துமாறும் புறக்கோட்டையிலிருந்து வெள்ளவத்தை நோக்கிச் செல்வோர் ஹெவ்லொக் வீதியைப் பயன்படுத்தி தெஹிவளை சென்று அங்கிருந்து காலி வீதிக்குச் செல்லும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதோடு,

தெஹிவளையைக் கடந்து காலி வீதியினூடாக புறக்கோட்டை வருவோர் தெஹிவளை வில்லியம்ஸ் மில்ஸடன் திரும்பி சாணங்கர மாவத்தையினூடாக காலி வீதிக்கு வரலாம் என வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மங்கள தெஹிதெனிய கூறியுள்ளார்.

அதேவேளை தொடர்ந்து பெய்த அடை மழை காரணமாக மட்டக்குளி பேர்குஷன் வீதியும் சுமார் 15 அடி கீழ் இறங்கியுள்ளது. இதனையடுத்து இவ்வீதியை தற்காலிகமாக பொலிஸார் மூடியுள்ளதுடன் பொதுமக்களை மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்துமாறு கோரியுள்ளனர். (ச-5)

# பல்துறைசார் இலவச மருத்துவ முகாம்

காரை அபிவிருத்திச் சபையும் யாழ்ப்பாண லயன்ஸ் கழகமும் பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிமனையும் இணைந்து நடாத்தும் பல்துறை சார் இலவச மருத்துவ முகாம் நாளை காரைநகர் சுற்றயல்கூறு வைத்தியசாலையில் காலை 8 மணிதொடக்கம் நண்பகல் ஒரு மணிவரை நடைபெறவுள்ளது.

இம்மருத்துவ முகாமில் சத்திரசிகிச்சை, மருத்துவ, பெண்நோயியல், மகப்பேற்றியல், குழந்தை மருத்துவவியல், புற்றுநோயியல், கண்நோயியல், சயரோகம் மற்றும் சருமநோயியல் சார் மருத்துவர்கள் கலந்து கொண்டு சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குவர்.

அத்துடன் இரத்த அமுத்த சோதனைகள் மற்றும் சிறுநீர், இரத்த சோதனைகளும் உடல் உறுப்புப் பரிசோதனை (Scanning) மேற்கொள்ளப்படும். காரைநகர்,மூளாய், சுழிபுரம், வட்டுக்கோட்டை, சங்கானை மற்றும் தீவகங்களைச் சேர்ந்த நோயாளிகள் இலவச மருத்துவ முகாமில் கலந்து வைத்திய சேவையைப் பெற்றுக்கொள்ளலாம் என அனுசரணையாளர்கள் தெரிவித்தனர். (ச)

# இலங்கை விவகாரத்தில் பிரிட்டன் தலையிடக்கூடாது

## ஜே.வி.பி.வலியுறுத்தல்

பிரித்தானியா தனது வேலையை மட்டும் பார்த்துக்கொள்ளவேண்டும். இலங்கை விவகாரங்களில் தலையிடக்கூடாது. பிரித்தானியா தற்போது உலக நாடுகளை ஆட்சி செய்யும் நாடல்ல. உலக நாடுகளில் அந்த நாடும் ஒரு அங் கமாகவே உள்ளது. இந்நிலையில் இலங்கை அரசாங்கத்தை மண்டியிடச் செய்யும் சர்வ தேச சதித்திட்டத்தின் ஒரு அங்கமாகவே பிரித் தானியாவின் இலங்கைக்கான அக்கறையை நாங்கள் நோக்குகின்றோம்.

எமது நாட்டின் விவகாரங்களில் சர்வதேசம் தலையிடுவதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது என்று ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்ற பெயரில் அரசாங்கம் முன்வைத்துள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வுயோசனையை நாங்கள் முழுமையாக நிராகரிக்கின்றோம்.

மகிந்த சிந்தனையை மீறியுள்ளமையினால் நாட்டு மக்களும் அதனை நிராகரிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுகின்றோம். அரசாங்கத்தின் யோசனைகளை கண்டித்து நாடளாவிய ரீதியில் எமது கட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அவர் கூறினார். கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரி விக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது; பிரித்தானிய பாராளுமன்றத்தில் இலங்கை விவகாரம் தொடர்பாக பேசப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. அத்துடன் இலங்கை விவகாரம் தொடர்பாக ஆராய விசேட பிரதிநிதி ஒருவரையும் நியமிக்க அந்நாடு தயாராகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.

பிரித்தானியாவுக்கு எமது நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுவதற்கு என்ன உரிமை உள்ளது? பிரித்தானியா மீண்டும் உலக நாடுகளை ஆட்சி செய்ய முயற்சிக்கிறது போல் தெரிகின்றது.

பிரித்தானிய இந்த உலகில் ஓர் அரசாங்கம் என்பதனை மட்டுமே கருத்தில்கொள்ள வேண்டும். அந்த நாடு உலகை ஆட்சி செய்த யுகம் முடிபடைந்து விட்டது. இலங்கையை சர்வதேசத்தின் முன் மண்டியிடச்செய்ய சர்வதேச மட்டத்தில் முயற்சிக்கப்படுகிறது.

வெளிநாடுகளின் முகவராகச் செயற்படும் ரணில் விக்கிரமசிங்காவை ஆட்சிக்குக் கொண்டுவர சர்வதேசம் முயற்சிக்கிறது. இதற்காக புலிகளின் அண்மைக்கால விமானத்தாக்குதலை சர்வதேசம் சிறப்பாக பயன்படுத்தி வருகிறது. (ச-5)

# பிரிட்டனின் தலையீட்டுக்கு ஐ.தே.கட்சி வரவேற்பு

இலங்கை இனப்பிரச்சினையில் தலையிட்டு அமைதியை ஏற்படுத்துவதற்காக பிரித்தானிய அரசின் விருப்பத்தை நாம் வரவேற்கிறோம். அதற்கான ஆதரவு எம்மால் வழங்கப்படும். எமது நாடு சர்வதேச சமூகத்தின் முன்னால் கேவலமடைந்துள்ளது. ஆட்கடத்தல் அதிகரித்துள்ள நாடாக இலங்கை மாறியுள்ளதை உலக நாடுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இதிலிருந்து பாதுகாப்புப் பெறுமாறும் தமது பிரஜைகளுக்கு அந் நாடுகள் அறிவுறுத்துகின்றன. இது ஆரோக்கியமான சூழல் அன்று என ஐக்கிய தேசியக்கட்சியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறியதாவது, விடுதலைப் புலிகளின் வான்தாக்குதல் பலத்தை ஏதேனும் ஒரு வகையில் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

அதனைக் கருத்தில் கொண்டு அரசு செயற்படவேண்டும். கட்டுநாயக்கா விமானப் படைத்தளம், பலாலி கூட்டுப்படைத்தளம் என தொடர்ந்து இன்று தலைநகர் கொழும்பிலும் விமானத்தாக்குதல் நடத்தும் அளவிற்கு புலிகள் பலமடைந்துள்ளனர்.

இரண்டு மூன்று மணித்தியாலங்கள் வானில் பறந்து வந்தே புலிகள் இத் தாக்குதலை நடத்தியுள்ளனர். ஆனால் இத் தாக்குதலை முறியடிக்க அரசினால் முடியவில்லை. புலிகளின் விமானம் எப்படி வருகிறது? எவ்வாறு திரும்பிச்செல்கிறது? என்பது இன்னமும் கண்டறியப்படவில்லை.

புலனாய்வுப் பிரிவின் இயலாத்தன்மையை இது எடுத்துக்காட்டுகின்றது. வான் தாக்குதலை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ளவேண்டும். இல்லையேல் அரச பிரதிநிதிகள் இதற்குப் பொறுப்புக் கூறவேண்டும்.

வான் தாக்குதல் எதிர்ப்பு ஆயுதங்களை கொள்வனவு செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. இது அவசியமானது. இதற்காக பணத்தை அச்சடித்து மக்களை பொருளாதார சுமைக்குள் தள்ளவேண்டாம். அமைச்சரவையை குறைத்தும் வெளிநாட்டு சுற்றுப் பயணங்களைக் குறைத்தும் நிதியைச் சேமியுங்கள். அதன் மூலம் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யுங்கள்.

புலிகளின் விமானத்தாக்குதலையடுத்து விமான சேவை மற்றும் சுற்றுலாத்துறை பாதிக்கப்பட்டுள்ளன எனவே பொருளாதார நிலைகளை பாதுகாப்பதில் அரசு கூடிய கவனம் செலுத்தவேண்டும். (ச-5)

## ஐ.தே.கவின்...

சுதந்திரக்கட்சி ஒரு துண்டுப்பிர சுரத்தைக் கூட வெளியிடவில்லை. மகிந்த ராஜபக்ஷ வின் புதிய அமைச்சரவைத் தெரிவு ஏனைய அமைச்சரவைகளை விட சிறந்ததாக இருக்குமென எதிர்பார்த்தோம்.

ஆனால் அது பதவி, அதிகார ஆசை பிடித்தவர்களையுடைய வீண்விரயமான அமைச்சரவையாகவே உள்ளது. எம்மையும் தம்முடன் இணைந்துகொள்ளுமாறு ஜனாதிபதி அழைக்கிறார். வீண் விரயமான அமைச்சரவையைக் கொண்ட அரசுடன் எப்படி இணைவது? ஐ.தே.கட்சியில் இருந்து அரசுடன் இணைந்து கொண்டவர்கள் மக்களுக்கு சேவை செய்யும் நோக்கில் இணையவில்லை. பதவி மோகத்தாலும் பேராசையாலுமே அவர்கள் அரசுடன் இணைந்துள்ளனர் என்றார். (ச)

## இராணுவத்திடம்...

கைது மற்றும் தடுப்பு நடவடிக்கைகளின் போது மனித உரிமைகளை மதித்து நடக்குமாறு பாதுகாப்புத் தரப்பினருக்கு பாதுகாப்புச் செயலாளர் அறிவுறுத்தல் விடுத்திருப்பது வரவேற்கத்தக்கது.

இருப்பினும் காவல்துறையினரின் அதிகாரங்களை மாற்றி அளித்திருப்பது பாதகமான விளைவையே ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## யாழ்.மக்களுக்கென...

உணவுப் பொருட்கள், மருந்துகள் ஆகியவற்றைத்திரட்டி அனுப்பிவைப் பது என முடிபு செய்து கடந்த டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி இதற்கான முயற்சிகளை தொடங்கினோம்.

தமிழகம் முழுவதும் பல்வேறு அமைப்புக்களும், தனிநபர்களும் மனிதநேய உணர்வுடன் இந்த முயற்சியில் ஈடுபட்டு உணவு, மருந்துப்பொருட்களை திரட்டினர். அவற்றை கையளிக்கும் விழாக்களும் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்றன.

சுமார் ஒருகோடி ரூபாய் பெறுமானமுள்ள அரிசி மற்றும் மருந்து பொருட்கள் சேகரிக்கப்பட்டதுடன் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழக நிர்வாகிகளைச் சந்தித்து இப் பொருட்களைக் கையளிப்பது குறித்துப்பேசி னோம். அவர்களும் இந்த பொறுப்பை ... ஏற்றுக்கொண்டு இந்திய செஞ்சிலுவைச் சங்க

ஆனாலும் இதுவரை இந்தப் பொருட்கள் அனுப்புவதற்கான அனுமதி கிடைக்கவில்லை. சேகரிக்கப்பட்ட அரிசி, பருப்பு போன்றவை பூச்சி, வண்டுகள், எலிகள் போன்றவற்றால் பாதிக்கப்படும் அபாயமும் சேகரிக்கப்பட்ட மருந்துப்பொருட்கள் காலாவதியாகிவிடக்கூடிய அபாயமும் உள்ளன.

உரிய வேளையில் இவை யாழ்.மக்களுக்கு கிடைக்கும்படி செய்தால்தான் பயன் உண்டு. பட்டினியால் வாடிக்கொண்டிருக்கும் மக்களுக்கும், மருந்துகள் பற்றாக் குறையினால் பெரும் துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் நோயாளிகளுக்கும் உதவவேண்டும் என்பதற்காக தமிழ்நாட்டு மக்கள் திரட்டித்தந்த இந்த பொருட்களை அனுப்பவிடாமல் இந்திய அரசு தாமதம் செய்வது சரியல்ல. உடனடியாக உரிய அனுமதியைத் தந்து இப்பொருட்

## செயற்குழுக் கூட்டம்

மாவட்ட கலை கலாசார பேரவையின் செயற்குழுக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதில் செயற்குழு உறுப்பினர்களை தவறாது கலந்துகொள்ளும்படி மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி கேட்டுள்ளார். (ச)

## கொழும்பில்...

கொழும்பு நீதிபதியின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளனர். ஏனையோர் தொடர்ந்தும் பொலிஸ் நிலையங்களில் வைக்கப்பட்டுள்ளனர்.

வாழைத்தோட்டம் பகுதியில் வைத்து நேற்றுக் காலை 10 பொதுமக்களும் வெள்ளவத்தையில் மூன்று பேரும் கைதுசெய்யப்பட்டனர். உரிய அடையாள அட்டையை காண்பிக்காததால் அவர்கள் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். உறவினர் வீடுகளிலும் விடுதிகளிலும் தங்கியிருந்த தமிழர்களே பெரும்பாலும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-5)

## மனித உரிமை...

பிற்காக அமைக்கப்பட்ட, ஜனாதிபதி ஆணைக்குழு, மனித உரிமை மீறல் களைக் கண்காணிப்பதற்கான சிறப்பு நிபுணர்கள் அடங்கிய சர்வதேச சுயாதீன குழு வின் பிரதிநிதிகளின் வருகையால் இக் கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச)

## இராணுவத்தினரின்...

குழு வட்டாரங்கள் தெரிவித்தன. முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத் தொடுவாய் இராணுவ முன்னரங்கப் பகுதி யில் விடுதலைப் புலிகளின் சடலம் ஒன்றை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளதாக தேசிய ஊடகத் தகவல்மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த வாரம் இப் பகுதியில் இடம் பெற்ற மோதல் ஒன்றில் கொல்லப்பட்டதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் மகளிர் அணியைச் சேர்ந்த மூவரின் சடலங்கள் இரு தினங்களுக்கு முன்னர் இராணுவத்தினரிடம் இருந்து பெறப்பட்டு விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்பட்டதாகவும் சர்வதேச செஞ்சிலுவைக் குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-3)





இணுவில்

அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோயில்

பஞ்சமுக விநாயகர் சந்நிதான
பஞ்சதள இராஜகோபுர
மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

விநாயகர் அடியார்களே!

நிகழும் மங்களகரமான சர்வசித்து வருஷம் சித்திரை
மாதம் 21-ம் நாள் (04.05.2007) வெள்ளிக்கிழமை
அதிகாலை 5.45 மணிக்கு ஆரம்பமாகியது

சித்திரை 23 ஆம் நாள் (06.05.2007) ஞாயிற்றுக்கிழமை
காலை 6.15 மணிக்கு ஸ்தூபிஸ்தாபனம்
சித்திரை 23 ஆம் நாள் (06.05.2007) ஞாயிற்றுக்கிழமை
மு.ப.11.00 மணிக்கு

**மகா கும்பாபிஷேகம் கோபுர தரிசனம்**

தொடர்ந்து மகா அபிஷேகம் நடைபெற்று அன்னதானம் நடைபெறும்.
அடியார்கள் யாவரும் வருகைதந்து எம்பெருமானின் இஷ்டசித்திகளைப்
பெற்றுய்வீர்களாக.

இணுவில். [சி-043]

இங்ஙனம்
விழா உபயகாரர்கள்


கப்பட்டதுடன் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழக நிர்வாகிகளைச் சந்தித்து இப் பொருட்களைக் கையளிப்பது குறித்துப்பேசி னோம். அவர்களும் இந்த பொறுப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு இந்திய செஞ்சிலுவைச் சங்க தலைமைக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தினார்க்ள்.

## புலிகளின் நிர்வாகப்...

இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் நடைபெற்ற முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான மூன்று மணிநேர விவாதத்தின்போது ஹெய்த் வாஸ் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,இனப்பிரச்சினை தொடர்பில் நாம் மூன்று விதமான செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளோம். முதலாவதாக அனைத்துக் கட்சிக்குழுவின் பிரதிநிதிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இறுதியில் இலங்கைக்கு பயணம் மேற்கொள்வர்.குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிகளுக்குச் சென்று பேச்சுக்கள் நடத்துவர்.

இரண்டாவதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளரும் புலிகளின் பேச்சுக்குழுத்தலைவருமான சு.ப.தமிழ்ச்செல்வனை பிரித்தானிய நாடாளுமன்றத்தில் தமது கருத்துக்களை விளக்க அழைக்க ஒப்புக்கொண்டுள்ளோம்.

மூன்றாவது, லண்டனில் எதிர்வரும் யூலை மாதத்தில் பல்வேறு தரப்பினரும் பங்கேற்கும் உச்சிமாநாடு ஒன்றை நடத்தவுள்ளோம்.தமிழீழ விடுதலைப்புலிகளின் மீதான பிரித்தானிய தடை எவ்வளவு விரைவில் நீக்கப்படுமோ அவ்வளவு விரைவில் நீக்கப்படும். ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. தடையை மீள் பரிசீலனை செய்யவேண்டும் என்றார் அவர்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளின் மீதான தடையை நீக்கி அந்த அமைப்பின் பிரதிநிதிகளை பிரித்தானிய நாடாளுமன்றத்தில் உரையாற்ற அழைக்க வேண்டுமென்று பிரித்தானிய அரசாங்கத்தை அந் நாட்டு அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவினர் அமைதிப்பேச்சுக்களை முன்னெடுக்க தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான பிரித்தானிய அரசாங்கத்தின் தடையை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-5)

நோயாளிகளுக்கும் உதவவேண்டும் என்பதற்காக தமிழ்நாட்டு மக்கள் திரட்டித்தந்த இந்த பொருட்களை அனுப்பவிடாமல் இந்திய அரசு தாமதம் செய்வது சரியல்ல. உடனடியாக உரிய அனுமதியைத் தந்து இப்பொருட்களை அனுப்ப உதவும்படி வேண்டிக்கொள்கிறோம் என அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## மூன்று...

யுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய இச் சந்திப்பில் அமைச்சர்கள் நிமால் சிறிபால டி சில்வா ,பேராசிரியர் விஸ்வவர்ணபால,வெளியுறவு அமைச்சர் றோகிதபோகொல்லாகம உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. (ச-3)

## விடுதலைப்புலிகளின்...

இலங்கை இராணுவத்தால் அந்த வானூர்திகளைத் தடுக்கவோ,விரட்டவோ,வீழ்த்தவோ முடியவில்லை. இலங்கையில் இருந்தாலும் இந்த வானூர்திகள் இந்தியப் பகுதிக்கும் பறந்து வரும் சாத்தியம் இருக்கிறது.

எனவே இந்தியப் பகுதிகளில் காவலும் கண்காணிப்பும் வலுப்படுத்தப்பட்டு வருகிறது. 1976 இல் கையெழுத்தான ஒப்பந்தத்தின்படி கச்சதீவு இலங்கைக்கு தரப்பட்டது. அதே சமயம் கச்சதீவில் இந்திய மீனவர்கள் சென்று இளைப்பாறவும் வலைகளை உலர்த்தவும் உரிமையுண்டு. சமீப காலமாக இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்குவதாகத் தகவல்கள் வந்தபோதிலும் கச்சதீவு குறித்து இலங்கையுடன் விவாதிக்கப் போவதில்லை என்றார் அவர். (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.05.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.